[2010 மே 4

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.

திரு. சுப. மதியரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எனது தொகுதியிலுள்ள இளையான்குடிக்குக் கேட்டிருக்கிறேன். நீங்களும் இங்கேதான் தங்கிப் படித்தீர்கள். தயவுசெய்து, விரைவிலே எனது தொகுதியிலுள்ள இளையான்குடியில் ஒரு மாணவியர் விடுதி அமைத்துக் கொடுத்திட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் அதே இடத்தில் அமைக்க வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதே இடத்தில்தான் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். நிச்சயமாக இந்த ஆண்டு விடுதி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. மத்திய திட்டக் குழுவிடம் தமிழகத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்றுத் தந்த மாண்புமிகு முதலமைச்சருக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் முதலில் உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், நீங்கள் உட்கார்ந்துகொண்டு கையைத் தூக்கினாலும் எனக்குத் தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

2010 மே 4]

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னாலே தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று, திட்டக் குழுவைச் சந்தித்து, இந்த ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடுகளைப் பற்றி விவரமாகவும், விளக்கமாகவும் பேசியதன் காரணமாக, 20,068 கோடி ரூபாயை தமிழகத்தினுடைய திட்டங்களுக்காக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 2,600 கோடி ரூபாய் அதிகமாகத் தமிழகம் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு அரசுப் பணிகள் சீரோடும், சிறப்போடும் நடைபெறுவதைத் திட்டக் குழு உறுப்பினர்களெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். அப்படிப் பாராட்டியதன் அடிப்படையில், சுமார் 150 கோடி ரூபாய் மானியமாகவும், ஊக்கத் தொகையாகவும் அரசுக்கு வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திட்டங்களைப் பாராட்டி, ஊக்கத் தொகை பெற்றிருக்கிற முதல் மாநிலம் தமிழ் மாநிலம் என்பதை இந்த அவையிலே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு மூல காரணமாக இருந்த காங்கிரஸ் கட்சித் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) திட்டக் குழுவின் துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா அவர்களுக்கும் இந்த அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், இதை வாதாடிப் பெற்று வந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த அவையின் சார்பாகப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னை, இராயபுரம் தனியார் சேமிப்புக் கிடங்கில் காலாவதியான உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்து பொது மக்களுக்கு விற்பனை செய்து வருவதைத் தடுக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றையதினம் மூன்று மானியக் கோரிக்கைகள்மீது உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. எனவே, ஒரேயொரு பிரச்சினை மட்டும் ஆய்விற்கு